07.07.2026

அ.வ.எண். 178/2019

வா.சா.1 – திரு. சண்முகராஜ், த/பெ.கிருஷ்ணசாமி

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 07.07.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1 முதல் 4 மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பிரதிவாதிகள் 5 நபர்கள் அவர்களில் 2 நபர்கள் இறந்த பின்னிட்டு அவர்களது வாரிசுகளை சேர்த்துள்ளேன். எனது பூமிக்கு கிழபுறமாக பிரதிவாதிகளுக்கு பூமி உள்ளது என்றால் சரிதான். எனது பூமி மேல்புறம் தென்வடல் தார் ரோட்டை ஒட்டி கிழபுறம் உள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு செல்வதற்கு நான் அடுத்தவர் பூமி வழியாக செல்ல வேண்டியதில்லை, ரோட்டில் இருந்து சென்று கொள்ளலாம்.

2. பிரதிவாதிகள் வேறு ஒருவர் பூமி வழியாக வந்தால் தான் தென்வடல் தார் ரோட்டை அடைய முடியும் என்றால் சரிதான். என்னுடைய பூமி வழியாக வரவேண்டியதில்லை. அவர்களுக்கு தனி தடம் உள்ளது. மேற்படி தனித்தடமானது எனது பூமியை ஒட்டி வடகோட்டில் கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான். அந்த தடத்தின் வழியாக தான் எனது பூமிக்கு வந்து கொண்டிருக்கிறோம். காலகாலமாக அவ்வாறு தான் வந்து கொண்டிருக்கிறோம்.

3. எனது ஆவணத்தில், மேற்படி பூமிக்கு வடபுறமாக கிழமேலாக செல்லும் வண்டித்தடத்தின் வழியாக வண்டி, வாகனங்கள் ஓட்டிக் கொள்ள வேண்டியது என எனது முன் ஆவணங்களில் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்கண்டவாறு தடம் உள்ளதா என்றால் இல்லை. வேறு ஆவணம் உள்ளது, அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞரும் கேட்கவில்லை. நான் சொல்வது போல் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 விடுதலை பத்திரத்தில், எனது பூமிக்கு வடபுறமாக கிழமேலாக செல்லும் வண்டித்தடத்தின் வழியாக வண்டி, வாகனங்கள் ஓட்டிக் கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் பூமியை ஒட்டி வடபுறமாக உள்ள கிழமேல் வண்டித்தடத்தில் தான் நான் க.ச.எண்.350 நெ.காலைக்கு அனைத்து வகையான வாகனங்களையும், ஓட்டிச் செல்கிறேனா என்றால் ஆமாம். அனைத்து வகையான வாகனங்களும் தங்கு, தடையின்றி செல்லும் அளவுக்கு தடம் உள்ளதா என்றால் முதலில் மாட்டு வண்டி சென்று கொண்டிருந்தது. தற்போது கனரக வாகனங்கள் செல்லும் அளவிற்கு தடம் உள்ளது. என்னுடைய காட்டையும் சேர்த்து தடமாக பயன்படுத்தி கொள்கிறார்கள். அதற்காக தான் கம்பிவேலி போட வேண்டும்.

5. தற்போது உள்ள தடமானது 2 வாகனங்கள் விலகி செல்லும் அளவுக்கு தடம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பூமியில் வடகோடு மேல்கோட்டில் கிழமேலாக 2 அடி உயரத்திற்கு கல் சுவர் உள்ளது என்றும், அது 300 அடி நீளத்திற்கு உள்ளது என்றால் சரிதான். அதனை ஒட்டி மின்கம்பம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தடத்தின் தென்புற விளம்புக்கும், எனது பூமியின் அறுதிக்கு இடையில் கிழமேலாக 14 வேப்பமரங்கள் கிழமேல் வரிசையில் உள்ளது என்றால் வேப்பமரம் இல்லை, செடியாக தான் உள்ளது. நான் சொல்லும் விவரம் தவறு என்றும், மேற்படி வேப்பமரம் 20 – 30 வருடங்களுக்கு குறையாத மரம் என்றால் இருக்கலாம். அது மானாவாரி பூமி என்பதால் அடிக்கடி செல்லவில்லை.

6. எனது பூமியில் வெள்ளை வேளாமரங்கள் அதிகம் உள்ளது என்றால் சரிதான். எனது பூமியில் இருந்து 1 அடி உயரத்தில் தடம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது பூமியை விட தடத்தை 1 அடி உயரமாக பலவந்தமாக போட்டனர். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்கறிஞர் வழக்கில் சொல்லியுள்ளரா என்று தெரியாது. மேற்படி விவரத்தை நீதிமன்ற ஆணையரை நியமித்து அழைத்து சென்று காட்டினேனா என்றால் அவ்வாறு ஒரு வழிமுறை உள்ளது பற்றி எனக்கு தெரியாது.

அது சம்மந்தமாக எனது வழக்கறிஞர் எனக்கு அறிவுரை வழங்கவில்லை. புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

7. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், அவ்வாறு தெரிந்தால் எனது வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். தற்போது உள்ள தடத்தை பயனாளியாக நானே உபயோகம் செய்து கொண்டு அந்த தடத்தை மறைத்து நான் கல்லுக்கால் போட வேண்டும் என்று சொல்வது சட்டப்படியும், நியாயப்படியும் உகந்தது அல்ல என்றால் சரியல்ல. முதலில் 10 அடி தடத்தில் மாட்டு வண்டி சென்று கொண்டிருந்தது. க.ச.எண்.351 ல் மாமூல் தடம் உள்ளது.தற்போது கனரக வாகனங்கள் பயன்பாட்டுக்கு வந்தபோது, எதிரே வரும் வாகனங்கள் எனது பூமி சர்வே எண்.350 வழியாக வருகிறது.

8. மேற்படி தடத்தின் வடபுற அறுதியில் கல்லுக்கால் உள்ளது என்றால் முள்கம்பிவேலி உள்ளது. பிரதிவாதிகள் விவசாயம் செய்தும், கோழிப்பண்ணை வைத்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி தடம் வழியாக தான், விவசாய விளைபொருட்களும், கோழிப்பண்ணைக்கு தேவையான தீவன பொருட்களும் கொண்டு செல்லப்படுகிறது என்றால் சரிதான். தற்போது தடமானது எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 20 அடிக்கு மேல் இருக்கும். எனது பூமியில் தற்போது கல்கட்டுச்சுவர் அடுக்கியுள்ள இடத்திற்கு வடபுறம் தடத்தின் அகலம் முதலில் 10 அடி இருந்தது, தற்போது வடபுறத்து காட்டுக்காரர் 10 அடி இடத்தை அவரது தேவைக்காக விட்டுள்ளார்.

9. நான் கல்கட்டுச்சுவர் அடுக்கியுள்ள இடத்தில், ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை 20 அடி அகலத்திற்கு குறைவில்லாமல் வண்டித்தடம் பயன்பாட்டில் உள்ளது என்றால் கல்கட்டுச்சுவர் அருகே சுமார் 18 அடி தடம் இருக்கும். கல்கட்டுச்சுவர் 300 அடி தாண்டி 20 அடி அகலத்தை விட தடம் கூடுதலாக இருக்கும். 300 அடி கல்கட்டுச்சுவர் அமைத்து எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் சுமார் 100 ஆண்டுகள் இருக்கும். எனது பிரமாண வாக்குமூலம்

பத்தி எண்.9 ல், எதிர்வழக்குரையில் ஆவண எண்.420/1979, 422/1979, 380/1987 ஆகிய ஆவணங்களில் க.ச.எண்.350/1 ல் தடம் உள்ளதாக எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். நகல் பெற்று பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன், எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆவண எண்.420/1979, 422/1979 மற்றும் 380/1987 ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை காட்டி கேட்டபோது எனக்கு கண்ணில் புரை உள்ளது எனவே, என்னால் படிக்க இயலவில்லை என சாட்சியம் அளிக்கிறார்.

**<u>1 முதல் 4 மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur